# மக்காச்சோளம் சாகுபடி தொழில்நுட்பங்கள்

## பருவம்

| | | |
|---|---|---|
| ஆடிப்பட்டம் | : | ஜுன்-ஜுலை |
| புரட்டாசிப்பட்டம் | : | செப்டம்பர்-அக்டோபர் |
| தை பட்டம் | : | ஜனவரி-பிப்ரவரி |

## இரகங்கள்

| இரகம் | வயது (நாள்) | உற்பத்தி திறன் கிலோ (ஏக்கருக்கு) |
|---|---|---|
| கோ (எச்) எம்-1 | 90-95 | 2000 |
| கோ (எச்) எம்-2 | 100-105 | 2160 |
| கோ (எச்) எம்-3 | 100 | 2000 |
| கோ (எச்) எம்-4 | 94 | 2280 |
| கோ (எச்) எம்-5 | 115 | 3200 |

## நிலம் தயாரித்தல்

நிலத்தை நன்கு உழுது பின் கடைசி உழவிற்கு முன் ஏக்கருக்கு 5 டன்கள் தொழுஉரம் (அ) கம்போஸ்ட் இடவும். 4 பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் 4 பாக்கெட் பாஸ்போ பாக்டீரியாவை போதியளவு மணலுடன் கலந்து சீராக வயலில் தூவ வேண்டும். மண் நன்கு பொலபொலப்புடன் இருத்தல் வேண்டும்.

## விதையளவு மற்றும் இடைவெளி

| ஏக்கருக்கு விதையளவு (கிலோ) | இடைவெளி (செ.மீ) | பயிர் எண்ணிக்கை (சதுர மீட்டருக்கு) |
|---|---|---|
| மானாவாரி-8 | 45x20 | 11 |
| இறவை-6 | 60x20 | 6 |

## விதை நேர்த்தி

விதைகளை பூஞ்சாண நோய் தாக்குதலில் இருந்து தடுக்க விதைப்பதற்கு 24 மணி நேரம் முன்பு, ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் டிரைகோடெர்மா விரிடி (அ) 10 கிராம் என்ற அளவில் சூடோமோனாஸ் கலந்து விதைக்க வேண்டும். விதைப்பதற்கு ½ மணி நேரத்திற்கு முன்பாக உயிர் உர விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

**உர நிர்வாகம்**

மண் ஆய்வு செய்து அதன் பரிந்துரைப்படி உரமிடல் சிறந்தது. இல்லையெனில் கீழ்கண்டவாறு பொதுப் பரிந்துரைப்படி தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை இடவும்.

| மானாவாரி | ஏக்கருக்கு (கிலோவில்) | | |
|---|---|---|---|
| | யூரியா | சூப்பர் | பொட்டாஷ் |
| முழு அளவு | 35 | 50 | - |
| அடியுரம் | 17 | 50 | - |
| முதல் மேலுரம் 25வது நாள் | 9 | - | - |
| 2ம் மேலுரம் 45வது நாள் | 9 | - | - |

| இறவை | ஏக்கருக்கு (கிலோவில்) | | |
|---|---|---|---|
| | யூரியா | சூப்பர் | பொட்டாஷ் |
| முழு அளவு | 132 | 187 | 50 |
| அடியுரம் | 33 | 187 | 50 |
| முதல் மேலுரம் 25வது நாள் | 66 | - | - |
| 2ம் மேலுரம் 45வது நாள் | 33 | - | - |

**நுண் சத்து உரம்**

சிறுதான்ய நுண் சத்து உரம் 5 கிலோவினை போதுமான அளவு மணலுடன் கலந்து விதைப்பதந்கு முன் ஒரே சீராக இடவும்.

**களை நிர்வாகம்**

களைக்கொல்லி மருந்து தெளிப்பதாக இருப்பின் விதைத்த 3 நாட்களுக்குள் மண்ணில் போதுமான ஈரம் இருக்கும்போது களைக்கொல்லிகளான அட்ரசின் 200 கிராம்/ஏக்கர் அல்லது ஆலாகுளோர் 1.6 லிட்டர்/ஏக்கர் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். 40-45 நாட்களில் ஒரு முறை கைக்களை எடுக்க வேண்டும்.

களைக்கொல்லி பயன்படுத்தாவிடில் விதைத்த 17-18 நாட்களில் ஒரு முறையும், 40-45 நாட்களில் மறுமுறையும் கைக்களை எடுத்தால் போதுமானது.

**பூச்சி நிர்வாகம்**

தண்டு துளைப்பான், கூன்வண்டு மற்றும் அசுவினி ஆகியவற்றின் தாக்குதலை கட்டுப்படுத்த விதைத்த 20ம் நாள் குருணை மருந்துகளான கார்போபியூரான் 3G 6 கிலோ (அ) கார்பரில் 4G 8 கிலோவை 20 கிலோ மணலுடன் கலந்து இலை இடுக்குகளில் தூவ வேண்டும்.

குருணை மருந்துக்கு பதிலாக திரவநிலையிலுள்ள குயினல்பாஸ் 25EC 400 மிலி (அ) நனையும் கார்பரில் தூள் 50wp 400 கிராமை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

**நோய் நிர்வாகம்**

அடிச்சாம்பல் நோயின் தாக்குதல் காணப்பட்டால் பாதிக்கப்பட்ட செடிகளை பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும். மேலும் ஏக்கருக்கு 400 கிராம் மெட்டலாக்சில் 72WP (அ) 400 கிராம் மேங்கோசெப் பூச்சாண மருந்தை 200 லிட்டர் நீருடன் கலந்து தெளிக்கலாம்.

இலைப்புள்ளி நோய் அதிகமிருப்பின் 1.0 கிராம் கேப்டான் (அ) 2.0 கிராம் மேங்கோசெப் பூஞ்சாண மருந்தை 1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.

**அறுவடை மற்றும் மகசூல்**

பயிர் பச்சை நிறம் மாறி இலைகள் உலர்ந்து மஞ்சள் நிறத்தில் காணப்படும். மணிகள் நன்கு முற்றி கடினமாக இருக்கும். மகசூல் ஏக்கருக்கு 2 முதல் 2.5 மெ.டன்கள் வரை ரகத்திற்கேற்றார் போல் கிடைக்கும்.